# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 248/மா/2017

ஆணை எண். 277/2017

நாள் : 15/12/2017

**திரு V.K. சீனிவாசன்,**
**சென்னை – 69.** – முறையீட்டு மனுதாரர்

**மண்டல அலுவலர்,**
**மண்டலம் – 12.**
**சென்னை மாநகராட்சி.** – எதிர் மனுதாரர்

சென்னை, குன்றத்தூர், எண்.14, செந்தாமரை நகர் முகவரியில் வசிக்கும் திரு V.K.சீனிவாசன் அவர்களின் 12.12.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.12.2017 அன்று பெறப்பட்டு 248/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, குன்றத்தூர், எண்.14, செந்தாமரை நகர் முகவரியில் வசிக்கும் திரு V.K.சீனிவாசன் என்பவர் தான் சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலத்தில் (மண்டலம்–12) பணியாற்றியபோது தன்னிடம் இருந்து பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி தொகை ரூ.8,771/– மட்டும் காசோலை மூலமாக வழங்கப்பட்டது என்றும், அத்தொகைக்கான வட்டித் தொகை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையிட்டுள்ளார். மேலும், அரசு வழங்கும் மானியத் தொகையும் இன்றுவரை வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். முறையீட்டாளரிடமிருந்து பெறப்பட்ட ஆவண நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. முறையீட்டு மனுதாரர் மூத்த குடிமகனாகவும் ஓய்வு பெற்ற மாநகராட்சிப் பணியாளராகவும் இருக்கும் நிலையில், அவரது முறையீட்டினை விதிகளுக்குட்பட்டு மனித நேயத்துடன் பரிசீலித்து மேலும், காலம் தாழ்த்தாமல் அவரது கோரிக்கை குறித்த மனுமீது உடன் நடவடிக்கை மேற்கொள்ள இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இதுசம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக் குறித்த அறிக்கையினை 30 நாட்களுக்குள் அனுப்பும் படியும், அறிவுறுத்தப்படுகிறது.

2017– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 15–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. **உதவி ஆணையர்,**
**மண்டலம் .12,**
**சென்னை மாநகராட்சி (இணைப்புடன்).**

2. **திரு V.K. சீனிவாசன்,**
**14, செந்தாமரை நகர்,**
**(தேவி நகர் அருகில்),**
**குன்றத்தூர், சென்னை – 600 069.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
**பிரிவு அலுவலர்(நிர்வாகம்)**
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்